**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, VANDAVASI.**

| | | |
|---|---|---|
| Case No | : | அ.வ.எண். 56/2013 |
| Deposition of Witness for | : | வா.த.சா. 1 |
| Name | : | பழனி |
| Father's/Husband's Name | : | பூங்காவனம் |
| Village and Taluk | : | ஜப்திகாரணி, வந்தவாசி |
| Caste | : | -- |
| Nationality | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 13.08.2019

**முதல் விசாரணை**

இந்த வழக்கில் நான் வாதியாவேன். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். ச.எண். 209/1 சம்மந்தமாக எனது தகப்பனார் பூங்காவனம் பெயரில் ஒப்படைவு செய்யப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு வா.த.சா.ஆ 1 ஆகும். ச.எண். 209/1 சம்மந்தமாக எனது சகோதரர் பெருமாள் பெயரில் ஒப்படைவு செய்யப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு வா.த.சா.ஆ 2 ஆகும். தாவா சொத்து சம்மந்தமான 1996 வருடம் முதல் 2011 வரையிலான எனது பெயரிலும், எனது தகப்பனார் மற்றும் எனது தாயார் பெயர்களிலும் செலுத்தப்பட்ட வீட்டுவரிக்கான ரசீதுகள் 6 வா.த.சா.ஆ 3 ( 6 வரிசைகள்) ஆகும். ச.எண். 209/1ல் உள்ள நிலம் சம்மந்தமான வில்லங்க சான்றிதழ் வா.த.சா.ஆ 4 ஆகும். கடந்த 29.08.1989 அன்று பிரதிவாதி ச.எண். 209/1ல் கிரையம் பெற்றது சம்மந்தமான கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 5 ஆகும்.

**மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**